பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(05.08.2023 முதல் 09.08.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 62 (08) PJN/GKMS/2023 தேதி: 04.08.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (27.07.2023 முதல் 31.07.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -09.08.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30/07 | 31/07 | 01/08 | 02/08 | 03/08 | | நாள்-1 05/08 | நாள்-2 06/08 | நாள்-3 07/08 | நாள்-4 08/08 | நாள்-5 09/08 |
| 0 | 1.5 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 3 | 2 | 4 | 2 | 3 |
| 37 | 39 | 39 | 38 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 38 | 37 | 36 | 36 | 36 |
| 27 | 27 | 27 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 2 | 2 | 3 | 3 | 1 | மேக மூட்டம் | 7 | 8 | 7 | 8 | 8 |
| 45-67 | 39-77 | 45-69 | 41-63 | 41-69 | ஈரப்பதம் (%) | 40-70 | 50-70 | 40-70 | 40-60 | 50-70 |
| 6 | 6 | 7 | 6 | 8 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 14 | 10 | 10 | 10 |
| தெற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (05.08.2023 முதல் 09.08.2023 வரை):

- ஆகஸ்ட் 05 லிருந்து 09 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 25-38 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- ஆகஸ்ட் 09 லிருந்து 15 வரை மழை (3.37 மி.மீ) இயல்பை விட அதிகமாக வும்' அதிகபட்ச வெப்பநிலை (32.03 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.59 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | பச்சைப் பாசி | நெல் வயலில் பச்சைப் பாசியைக் கட்டுப்படுத்த மயில் துத்தநாகத்தை (Copper Sulphate) 1000 கிராம் என்ற அளவில் காடா துணியில் கட்டி நெல் வயலின் வாமடையில் வைக்கவும். |
| | நாற்றங்கால் நடவு வயல் நேரடி சேற்று விதைப்பு | **நெற் பயிரின் நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஒரு சென்ட்க்கு ஒரு மி.லி. பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium 10 SC) களைக்கொல்லியை விதைத்த 8 நாட்களுக்கு பிறகு பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| | | **நெற் பயிரின் நடவு வயலில்** களைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு பிரிட்டிலாக்லோர் 50 EC (Pretilachlor) 800 மி.லி. அல்லது பைரசோஸல்ப்யூரான் ஈதைல் 10 WP (Pyrazosullfuron ethyl) 80 கிராம் **நடவு** நட்ட மூன்று நாட்களுக்கு தெளிக்கவும்.<br>**நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஏக்கருக்கு ட்ரைஃபாமோன் (Triafamone) + ஈத்தாக்சி சல்ஃப்யூரான் (Ethoxysulfuron) 90 கிராம் விதைத்த 12-15 நாட்களில் தெளிக்க வேண்டும். |
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் ரோசின் சோப் @ 25 கிராம் / லிட்டர் அல்லது வேப்பெண்ணெய் 2% (20 மிலி/லிட்டர்) அல்லது வேப்பங்கோட்டைச்சாறு 5% அல்லது புயுப்ரோபிசின் 25 SC @ 2 மிலி/ லிட்டர் அல்லது ப்ரோபெனோபாஸ் 50 EC @ 2 மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| | | பருத்தியில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட செடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் வேர் பகுதியினை சுற்றியிலும் ஒரு லிட்டர் நீரில் ஓர் கிராம் கார்பென்டசிம் அல்லது 0.75 கிராம் ட்ரைபிலொக்சிஸ்ட்ரோபின் + டெபுகோணசோல் கலந்த புசணக் கொல்லி கரைசலினால் நன்றாக நனைக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதை தவிர்க்கவும்.

**முதல்வர்**